அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 5/91

அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம் - கொழும்பு. 7
1991, பெப்ரவரி 17ஆம் திகதி.

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்களுக்கும்,
திணைக்களங்களின் தலைவர்களுக்கும்,
அரசாங்க கூட்டுத்தாபனத் தலைவர்களுக்கும்,
அரசாங்க உடைமைக் கம்பனிகளின் தலைவர்களுக்கும்,
அரசாங்க உடைமைத் தொழில் முயற்சிகளின் தகவுடை அதிகாரிகளுக்கும்.

புனர்வாழ்வு ஆணையாளரின் உத்தியோக கடமைகளின் பொருட்டு கூட்டுத்தாபனங்கள்/திணைக்களங்கள, வர்த்தக நிறுவனங்கள் என்பவற்றிலிருந்து தற்காலிகமாக விடுவிக்கப்படும் நபர்களின் உரிமைகளையும் சலுகைகளையும் அவர்களுக்கு பாதுகாத்தல்.

---

இளைஞர் விவகார விளையாட்டு அமைச்சின் புனர்வாழ்வு ஆணையாளரின் காரியாலயத்தில் கடமைகளில் ஈடுபடுத்தப்படும் அமைச்சுக்கள்/திணைக்களங்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் என்பவற்றுக்கு உரித்தான பணியாளர்களை தத்தமது கடமைகள் முடிவடைந்ததும் மறுபடி அவர்களை அவர்களுக்குரிய நிறுவனங்களுக்கு அனுப்பி வைத்ததன் பின்பு, அவர்கள் ஆரம்பத்தில் இளைஞர் விவகார விளையாட்டு அமைச்சுக்கு விடுவிக்கப்படாமல் இருப்பின் அவர்களுக்கு உரித்தாக வேண்டிய உரிமைகளையும், சலுகைகளையும் அவ்வண்ணமே அவர்களுக்கு வழங்குதல் வேண்டும் என அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

( ஆர். அபேரத்ன. )
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.